# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 14,727/11 — 1966 දෙසැම්බර් 30 වැනි සිකුරාදා — 1966.12.30**

**14,727/11 ம் இலக்கம் — 1966 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ந் திகதி வெள்ளிக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


# பகுதி I : தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ.—பீ 43/48 ம. தே. கா. இல. சீ. 293/65

**1946 ஆம் ஆண்டின் இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளை**

**82 ஆம் பிரிவின் கீழான அறிக்கை**

17 ஆம் இலக்கத் தேர்தல் மாவட்டமான கொலன்னுவைக்கு டொன் சேனதீர சமரசிங்கா தெரியப்படுதலையும் தெரிந்து அனுப்பப்படுதலையும் முறைப்பாடு செய்யும் தேர்தல் மனுவை விளங்கிய தேர்தல் நீதிபதியினுற் செய்யப்பட்ட அறிக்கையின் (தமிழ் மொழிபெயர்ப்பின்) பிரதியொன்று 1961 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்கச் சட்டத்தினுற்றிருத்தப்பட்டவாறுள்ள (381 ஆம் அத்தியாயமான) 1946 ஆம் ஆண்டின் இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளையின் 82ஈ(2) (அ) என்னும் பிரிவினுல் பணிக்கப்பட்டவாறு இதன் கீழ்ப் பிரசுரிக்கப்படுகின்றது.

மேன்மை தங்கிய உத்தமரின் ஆணைப்படி,

**தி. விஜேவர்தன,**
மகாதேசாதிபதியின் செயலாளர்.

கொழும்பு, 27 திசெம்பர், 1966.

**1965 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கத் தேர்தல் மனு**

**1965 மார்ச்சு 22 ந் நாள் நிகழ்ந்த, தேர்தல் மாவட்டம் இலக்கம் 17, கொலன்னுவைக்கான, தேர்தல்**

பிரதிநிதிகள் சபையில் 17 ஆம் இலக்கம், கொலன்னுவைத் தேர்தல் மாவட்டத்துக்கான பிரதிநிதி ஒருவரைத் தெரிவதற்கென, 1965 மார்ச்சு 22 ஆம் தேதி நடாத்தப்பட்ட தேர்தலின் பொழுது அதற்கான அபேட்சகர் ஒருவராகவிருந்த டொன் சேனதீர சமரசிங்கா என்பவர், சொல்லப்பட்ட பாராளுமன்றத் தேர்தல்கள் அரசப்பேரவைக் கட்டளையின் 57 (ஆ) என்னும் பிரிவின் கருத்துக்குட்பட மூன்று கைலஞ்சக் குற்றங்கள் புரிந்துள்ளார் என எண்பிக்கப்பட்டுள்ளது :—எவ்விதமெனில்

(1) 1964 திசெம்பர் 20 ஆம் நாளுக்கும் 1965 சனவரி இரண்டாம் நாளுக்குமிடையே எற்றியாச்சிக்கே சிரிசேனு என்னும் ஒருவருக்கு அச்சிரிசேனுவை வாக்களிக்க ஊக்கமளிக்கவென கொழும்பில் நடைபெற்ற அரசாங்கக் கைத்தொழிற் பொருட்காட்சியில் வேலை எடுத்துக் கொடுத்தார் ;

(2) 1965 சனவரி 8 ஆம், 10 ஆம் தேதிகளுக்கிடையே, பீ. எம். கூரே என்னும் ஒருவர்க்கு அக் கூரேயை வாக்களிக்க ஊக்கமளிக்கவென கொழும்பில் நடைபெற்ற அரசாங்கக் கைத்தொழிற் பொருட்காட்சியில் வேலை எடுத்துக் கொடுத்தார் ;

(3) 1965 சனவரி 10 ஆம் 14 ஆம் தேதிகளுக்கிடையே எம். சி. தர்மதாசா என்னும் ஒருவர்க்கு, அத்தர்மதாசாவை வாக்களிக்க ஊக்கமாளிக்கவென கொழும்பில் நடைபெற்ற அரசாங்க கைத்தொழிற் பொருட் காட்சியில் வேலை எடுத்துக் கொடுத்தார் ;

என 6 ஆம் இலக்கத் தேர்தல் மனுவை விளங்கியதிலிருந்து இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளை, 1946 இன் 82 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிக்கை செய்கிறேன்.

ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தாருமாண்டு யூன் மாதம் இருபத்தி மூன்றும் நாளாகிய வியாழனன்று கொழும்பில் என்கைப்பட வழங்கப்பட்டது.

ரி. எஸ். பர்ணுந்து,
தேர்தல் நீதிபதி.

12-1466/1

எல். டி.—பி 43/48 ம. தே. கா. இல. சி. 293/65

## இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளை, 1946

### 82ஈ (1) (ஆ) என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்

17 ஆம் இலக்கத் தேர்தல் மாவட்டமான கொலொன்னவைக்கு திரு. டொன் சேனதீர சமரசிங்க உறுப்பினராகத் தெரியப் படுதலையும் தெரிந்தனுப்பப் படுதலையும் முறைப்பாடு செய்யும் தேர்தல் மனுவை விளங்கிய தேர்தல் நீதிபதி, திரு. டொன் சேனதீர சமரசிங்க் தெரியப்பட்டமை வறிதாகியுள்ளது எனத் தாம் துணிந்துள்ளார் என, (381 ஆம் அத்தியாய மான) இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளை 1946 இன் 81 ஆம் பிரிவின்கீழ் அத் தாட்சிப்படுத்தியுள்ளாராதலால், மகாதேசாதிபதி விலியம் கொபல்லவ ஆகிய யான், அந்த அரசப் பேரவைக் கட்டளை யின் 27 ஆம் பிரிவினோடு சேர்த்து வாசிக்கப்படும் 82ஈ(1) (ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத் துவங்களைப் பின்பற்றி இவ்வறிவித்தல் மூலம்—

(1) மேற்சொல்லப்பட்ட தேர்தல் மாவட்டத்தில் தேர்தல் ஒன்று நடாத்தப்படக் கட்டளையிடுகிறேன்; அத் துடன்

(2) அத்தகைய தேர்தலுக்கான வேட்பாளர்களின் பெயர் களைக் குறிப்பிடுவதற்கு 1967, ஜனவரி மாதம் 21 ம் நாளைத் தேதியாகவும் கொழும்புக் கச்சேரியை இட மாகவும் குறிப்பிடுகிறேன்.

டபிள்யூ. கொபல்லவ,
மகாதேசாதிபதி.

கண்டி,
1966 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28 ந் தேதி.
12-1466/2

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.